[திரு. செ. மாதவன்] [1971 ஜூன் 30

ரூ. 18 லட்சம் உத்தரவாத உதவி அளிக்கப்பட்டது. இந்த ஆலை இவ்வுதவியைப் பயன்படுத்திக்கொண்டு சிண்டிகேட் வங்கியிடமிருந்து கடன் பெற்றது. இவ்வாலை கலைக்கப்படும் நிலையில் உள்ளது. இவ்வாலையை குத்தகைக்கு எடுத்து நடத்த வேண்டுமென்ற இவ்வாலைத் தொழிலாளர்களின் செயற்குறிப்பு குறித்துத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்துடன் கலந்தாலோசித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எனவே, இவ்வாலைகளுக்கு விரைவில் புத்துயிர் அளித்து அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதை இதிலிருந்து அறியலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்த ஆலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பல மாதங்களாக, நகர்ப்புறத்தில் குடியிருப்பதன் காரணமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்காக அரசாங்கமே அந்த ஆலைகளை எடுத்து நடத்துவதற்காகப் பரிசீலனை செய்து, தமிழ்நாடு கார்ப்பரேஷனோடு சேர்ந்து கலந்து, மத்திய கார்ப்பரேஷனோடு கலந்துபேசி மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெற்றோ அல்லது பாங்குகளின் மூலமாக நிதி பெற்றோ அந்த ஆலைகளை தொழிலாளர்கள் நடத்துவதற்கான வாய்ப்பை உருவாக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, எந்தெந்த ஆலைகளை அரசு எடுத்து நடத்தினால் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், அதேசமயத்தில் அரசினுடைய பணத்திற்கு இழப்பு இல்லாமல் இருக்கும் என்று தோன்றுகிறதோ அந்த ஆலைகளை அரசு எடுத்து நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்.

(4) அறிவிப்பு

மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Madurai University Senate) கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்

1. திரு. வீ. மலைக்கண்ணன்
2. திரு. கா. மு. கதிரவன்
3. திரு. சொ. காவேரிமணியம்

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது, மூன்று என்பதால், இம்மூவரும் மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.